# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 382 /பேரூ/2025**
**நாள் : 05.02.2026**

1. R. சந்தியா (துணைத் தலைவர் மற்றும் 18வது வார்டு உறுப்பினர், தம்மம்பட்டி பேரூராட்சி)
2. G. ரமேஷ் (1 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
3. A. நடராஜ் (3 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
4. R. வரதராஜன் (5 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
5. K. சமீனா (8 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
6. A. சந்திரா (9 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
7. பெ. செல்வி (10 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
8. S. புவனேஸ்வரி (11 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
9. S. காவியா (12 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
10. B. கலிய வரதராஜு (13 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
11. S. நித்யா (14 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
12. R. ரேவதி (15 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)
13. S. திருச்செல்வன் (17 வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர்)

தம்மம்பட்டி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்கள்

செயல் அலுவலர்,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி. R. சந்தியா மற்றும் 12 பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் ஆகியோரின் 14.10.2025 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 15.10.2025 அன்று பெறப்பட்டு, 382/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி R. சந்தியா மற்றும் முறையீட்டு மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ள 12 தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் தங்களது 14.10.2025 நாளிட்ட புகார் மனுக்களில் கீழ்க்காணும் ஒரே மாதிரியான புகார்களை தெரிவித்துள்ளனர்.

“சேலம் மாவட்டம் தம்மம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சிக்கு சொந்தமான டுபிட்கோ கடை எண். 4ஐ தம்மம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சியில் 16வது வார்டில் தேர்தலில் உண்மையை மறைத்தும், ஏமாற்றும் நோக்கத்தோடும் போட்டியிட்டு வெற்றி பெற்ற S. பழனிமுத்து த/பெ செங்கமலை 28/23 குறும்பர் தெருவில் வசிக்கும் மேற்படி நபர் கடந்த 2022 முதல் கடையினை தனது பெயரில் ஏலம் எடுத்து வைத்துக்கொண்டும் அதற்குண்டான வாடகையை நிலுவைத் தொகையினை செலுத்தாமல் பழனிமுத்து கவுன்சிலராக பதவி வகித்து கொண்டு எந்தவித ஒப்பந்தமோ, பிரதிபலனோ அனுபவிக்க கூடாது என்றும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய பாக்கி நிலுவை இருக்கக் கூடாது என தமிழ்நாடு உள்ளாட்சி சட்ட விதிகள் சட்டம் 12 (2), (3), (6), (c) (i) (ii) (32(j) விதிகளின்படி S. பழனிமுத்து S/o செங்கமலை 28/23 குறும்பர் தெரு தம்மம்பட்டி என்பவரின் 16வது வார்டு கவுன்சிலர் பதவியினை தகுதியிழப்பு செய்து மேற்படி 16வது வார்டு காலியிடம் என அறிவித்தும் மேற்படி நபரின் மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்தும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவை தொகையினையும் வசூலித்து பேரூராட்சிக்கு பெரும் பண இழப்பினை காத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

பின்னிட்டு தம்மம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி மூலம் கடந்த 14.08.2024, 21.10.2024ல் மேற்படி நபருக்கு வாடகை பாக்கி ரூ.3,10,058, செலுத்த வேண்டி பதிவுத் தபால் அனுப்பியும் எந்த முன்னேற்றமும் இல்லை. இது சம்பந்தமாக மாநில தேர்தல் ஆணையம், பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், பேரூராட்சி உதவி இயக்குநர், செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்க 13.06.2025-ல் பதிவு தபால் அனுப்பினோம். அதற்கு 03.07.2025-ல் பதில் நடவடிக்கை எடுப்பதாக கூறி கடிதம் அனுப்பியது. மேலும் செயல் அலுவலகம் தம்மம்பட்டி மூலம் 08.08.2025-ல் மேற்படி சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதாக கூறி கடிதம் வரப்பெற்றது. இந்நிலையில் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே அய்யா அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி சட்ட விதிகள் சட்டம் 12(2), (3), (6), ( c ) (i) (ii) 32 (j) ஆகிய சட்ட விதிகளின்படி S. பழனிமுத்து S/o செங்கமலை 28/23 குறும்பர் தெரு 17வது வார்டு தம்மம்பட்டி என்பவரின் 16வது வார்டு கவுன்சிலர் பதவியினை தகுதியிழப்பு செய்தும் மேற்படி 16வது வார்டு காலியிடம் என அறிவித்து மறு தேர்தல் நடத்திட உத்தரவிட்டு நடவடிக்கை எடுத்தும் பேரூராட்சி நிர்வாக வாடகை நிலுவைத் தொகைக்கு நடவடிக்கை எடுத்து ரொக்க வரி மற்றும் அபராதத்துடன் வசூலித்து பேரூராட்சியின் பண இழப்பினை காத்திட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை எனவும், எதுவும் கற்பனையோ, புனைந்துரைக்கப்பட்டவையோ, காழ்ப்புணர்ச்சியாலோ எதுவும் தங்களுக்கு தெரிவிக்கவில்லை அனைத்தும் உண்மை எனவும் தகுந்த ஆதாரங்களுடன் தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஐயா அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்து நல்லதொரு நடவடிக்கைக்காக காத்திருக்கும் உண்மையானவர்கள்” என தெரிவித்துள்ளனர்.

2. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.01.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 1157/2025/அ1-ல் மனுதாரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

“தம்மம்பட்டி பேரூராட்சி 16வது வார்டு உறுப்பினர் திரு. S. பழனிமுத்து என்பவர் 2022ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டபோது டுபிட்கோ கடை எண்.4ற்கான வாடகை தொகையை முழுவதுமாக செலுத்தி உரிய நிலுவையில்லா சான்று பெற்று சமர்ப்பித்து

அதன்படியே போட்டியிட்டார். அதன்பின்னர் மேற்படி கடை பேரூராட்சிக்கு ஒப்படைத்து விட்டதாக கடிதம் கொடுத்துள்ளார். அதன்பின்னர் மேற்படி கடையினை யாரும் நடத்தவில்லை. இருந்தபோதிலும் நீண்ட நாட்களாக மூடியிருந்த 10 கடைகளுடன் சேர்த்து மேற்படி கடையும் ஏலம் விடப்பட்டது. ஏலம் விடும் காலத்திற்கு முன்னர் இருந்தவரை கடை வாடகை தொகையினை வசூல் செய்ய வழக்கு எண். OS-370/25(SC)ன் மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கினை தீர்ப்பினை பொருத்து கடை வாடகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தற்போதைய நிலையில் கடை காலியாகவே உள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர்களின் புகார் மனுக்கள், மற்றும் தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரர்களான சேலம் மாவட்டம், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்றத் துணைத் தலைவரான திருமதி. R. சந்தியா மற்றும் 12 பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் தங்களது 14.10.2025 நாளிட்ட மனுக்களில் ஒரே மாதிரியான புகாரான தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற 16வது வார்டு மன்ற உறுப்பினரான திரு. S. பழனிமுத்து என்பவர் பேரூராட்சிக்கு சொந்தமான டுபிட்கோ கடை எண். 4ஐ விதிமீறி 2022ஆம் ஆண்டு முதல் தனது பெயரில் ஏலம் எடுத்தும், கடைக்கான வாடகை தொகை செலுத்தாமலும் நிலுவையில் வைத்துள்ளார் என்றும், பேரூராட்சி மன்ற உறுப்பினர், பேரூராட்சி தொடர்பான எவ்வித ஒப்பந்தமோ மற்றும் பிரதிபலனோ அனுபவிக்க கூடாது என்ற நிலையிலும், பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை இருக்கக் கூடாது என தமிழ்நாடு உள்ளாட்சி சட்ட விதிகள் 12(2), (3), (6), ( c ) (i) (ii), 32 (j) விதிகளின்படி திரு. S. பழனிமுத்து என்பவரின் 16வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியை தகுதியிழப்பு செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளது தெரிய வருகிறது.

மனுதாரர்கள் புகாராக தெரிவிக்கும் திரு. S. பழனிமுத்து என்பவர் 2022ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டபோது டுபிட்கோ கடை எண்.4ற்கான வாடகை தொகையை முழுவதுமாக செலுத்தி, நிலுவையில்லா சான்றை பெற்று, அதன் அடிப்படையில் போட்டியிட்டு 16வது வார்டு உறுப்பினராக உள்ளார் என்பதை செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக அறிய வருகிறது. மேலும் திரு. பழனிமுத்து என்பவர் ஒப்படைத்த கடையுடன் 10 கடைகள் நீண்ட நாட்கள் மூடியிருந்ததால் மேற்காணும் கடை எண் 4 ஏலம் விடப்பட்டது எனவும் ஏலம் விடும் காலத்திற்கு முன்னர் இருந்தவரை கடை வாடகை தொகையினை வசூல் செய்ய பேரூராட்சி செயல் அலுவலரால் திரு. பழனிமுத்து என்பவரை எதிர்த்து ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் (Sub Judge Court, Attur) வழக்கு (OS No.370/2025) தொடரப்பட்டு, வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் e-court India Services என்ற இணையதளம் வாயிலாகவும் தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxx xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர்கள் தெரிவிக்கும் புகார்களில் ஒன்றான நிலுவையிலுள்ள கடை வாடகையை திரு. S. பழனிமுத்து என்பவரிடமிருந்து வசூலிப்பது தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரால் மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். OS No.370/2025) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3)(b)–ன்படி மனுதாரர்களின் 14.10.2025 நாளிட்ட புகார் மனுக்களை விசாரிக்க இயலாது என்பதால், இப்புகார் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி 05-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. ர. சந்தியா,
   க/பெ. ரஞ்சித்குமார், துணை தலைவர்,
   தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி,
   பனந்தோப்பு தெற்கு காட்டுகொட்டாய்,
   தம்மம்பட்டி அஞ்சல் – 636 113, சேலம் மாவட்டம்.
2. திரு. க. ரமேஷ், த/பெ. கணேசன்,
   1வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   1/45, உடையார்பாளையம்,தம்மம்பட்டி- 636 113. சேலம் மாவட்டம்.
3. திரு. அ. நடராஜ், த/பெ. அய்யாவு,
   3வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   18 A, ஜோதிநகர், உடையாளர்பாளையம்,
   தம்மம்பட்டி அஞ்சல் - 636 113, சேலம் மாவட்டம்.
4. திரு. R. வரதராஜன், த/பெ. ரங்கசாமி,
   5வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி ,
   161.பி. காட்டுகொட்டாய், தம்மம்பட்டி அஞ்சல் - 636 113,
   சேலம் மாவட்டம்.
5. திருமதி. கா. சமீனா, W/o காதர்மொய்தீன்,
   8வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   26, முஸ்லீம் தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
   சேலம் மாவட்டம் - 636 113.
6. ஆ. சந்திரா, W/o ஆன்சன்பீட்டி,
   9வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி ,
   கிருத்துவதெரு, கோனேரிப்பட்டி, தம்மம்பட்டி அஞ்சல்
   சேலம் மாவட்டம் – 636 113.
7. திருமதி. பெ. செல்வி, க/பெ. பெருமாள்,
   10வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
   161, கடைவீதி, தம்மம்பட்டி அஞ்சல் – 636 113. சேலம் மாவட்டம்.

8. திருமதி. S. புவனேஷ்வரி, க/பெ. ஸ்ரீகுமரன்,
11வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
100, நடுவீதி, தம்மம்பட்டி அஞ்சல் – 636 113,
சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம். – 636 113.

9. திருமதி. சே. காவியா, W/o சேகர்,
12வது வார்டு கவுன்சிலர், 7/3, ஆதிதிராவிடர் தெரு,
தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
தம்மம்பட்டி அஞ்சல் – 636 113, சேலம் மாவட்டம்.

10. திரு. B. கலியவரதராஜ்., S/o போஜன்,
13வது வார்டு கவுன்சிலர், 8, அருந்ததியர் தெரு,
தம்மம்பட்டி அஞ்சல், சேலம் மாவட்டம் - 636 113.

11. திருமதி. செ. நித்யா, W/o செந்தில்குமார்,
14வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
234, தெற்குகாட்டு கொட்டாய், தம்மம்பட்டி அஞ்சல் - 636 113,
சேலம் மாவட்டம்.

12. திருமதி. ரா. ரேவதி, W/o ராஜகோபால்,
15வது வார்டு கவுன்சிலர்,
சிறப்புநிலை பேரூராட்சி, தம்மம்பட்டி – 636 113,
15-c, ஆதிதிராவிடர் தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 113.

13. திரு. S. திருச்செல்வன், S/o சண்முகம்,
17வது வார்டு கவுன்சிலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி
101, ஆஸ்பத்திரி தெரு, தம்மம்பட்டி அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 113.

14. செயல் அலுவலர், தம்மம்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம் - 636 113.

15. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

16. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.